[5th March 1965

திரு. செ. மாதவன்: இந்த நிகழ்ச்சி திட்டமிட்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சியா அல்லது திடீரென்று புரட்சி ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திட்டமிட்டு நடந்த நிகழ்ச்சியாக நான் கருதவில்லை.

திரு. செ. மாதவன்: இந்த நிகழ்ச்சி நடந்தவுடன் உடனடியாக அங்கு சென்று பார்த்து, இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே அது மக்களுடைய ஸ்பான்டேனியஸ் எழுச்சி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் தமிழில் சொன்னதைத்தான் நான் ஆங்கிலத்தில் சொன்னேன்.

திட்டச் செலவைக் குறைப்பதற்காக மத்திய அரசாங்கத்தின் உத்திரவு

*153. கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திட்டச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசு இம் மாநில அரசுக்கு ஏதேனும் உத்திரவு பிறப்பித்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம் மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM: (a) No, Sir.
(b) Does not arise.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு குறைந்த அளவு பென்ஷன்

*154. கேள்வி—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கப் பள்ளிகளினின்றும், தனியார் பள்ளிகளினின்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் குறைந்த அளவு பென்ஷன் ரூ. 20 கொடுக்கும் திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: At present retired Government servants including teachers in Government service are granted a minimum pension of Rs. 20 per mensem. The question of allowing a similar rate of pension to all retired teachers of aided schools and local body schools is under consideration.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களில் சிலருக்கு இன்னமும் ரூபாய் 8, 9, 10 என்று பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. இதை 20